டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.11.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 116 - Madurai | Online Edition

# மத்திய நிலவளத்துறையும், ஆந்திரப்பிரதேச அரசும் தேசிய நீர்நிலை மாநாட்டை நடத்தவுள்ளன

புது தில்லி, நவ.8

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள நிலவளத்துறை, ஆந்திரப் பிரதேச அரசுடன் இணைந்து ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூரில் வரும் 10, 11 ஆகிய தேதிகளில் தேசிய நீர்நிலை மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பிரதமரின் வேளாண் பாசனத் திட்டம் 2.0-ன் அமலாக்கம், 2026 முதல் செய்யப்படவுள்ள நீர்நிலை மேம்பாட்டு திட்டத்தின் அணுகு முறை, விழிப்புணர்வு மற்றும் மக்கள் பங்கேற்பை அதிகரிப்ப தற்கான நீர்நிலை பெருவிழா, நீர்நிலைகள் புனரமைப்பு இயக்கம் தொடங்குதல் போன்றவை இந்த மாநாட்டின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

பொதுக்கூட்டம் ஒன்றில் தொடங்கப்படவுள்ள நீர்நிலை திருவிழாவில் மத்திய ஊரக மேம்பாடு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான், மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திர சேகர் பெம்மசானி, ஆந்திரப் பிரதேச துணை முதலமைச்சர் பவன் கல்யாண் உள்ளிட்டோர் கலந்து கொள்வார்கள்.

மக்கள் பங்கேற்பை அதிகரிக்க நீர்நிலை பெருவிழா நாடு முழுவதும் நடத்தப்படவுள்ளது. நீர்நிலை மக்கள் பங்கேற்புக் கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை வழங்குதல், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல், உடல் உழைப்பு செலுத்துதல், மரக்கன்றுகள் நடுதல் ஆகியவையும் இந்தத் திருவிழாவின் செயல்பாடுகளில் அடங்கும்.

# பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், நவ.8

கடலூர் மாவட்டம், குமாராட்சி வட்டாரம், வடமூர் கிராமத்தில் 8.11.25 அன்று பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், சிறப்புரையாற்றினார். மேலும் பயிர் வகை பயிர்களில் விதை உற்பத்தி, சாகுபடி தொழில்நுட்பங்கள், நிலம் தயாரிப்பு, விதை நேர்த்திசெய்யும் முறை, புதிய இரகங்கள், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த களை நிர்வாகம், நுண்ணூட்டக் கலவையின் பயன்பாடு, மண் மற்றும் நீர் பரிசோதனை முறை மற்றும் 'TNAU பயறு ஒன்டர்' இலைவழி மூலமாக தெளிக்கும் முறை பற்றிய தொழில்நுட்பங்களை தெளிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் வடமூர் கிராமம், குமாராட்சி வட்டாரத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது



மதுரை, நவ.8

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் குருவித் துறை கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள், விரிவாக்க பணி யாளர்கள், விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் வேளாண்மைத் துறையில் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எடுத்து கூறினார். மேலும் வேளாண் அறிவியல் நிலைய துணை பேராசிரியர் டாக்டர் சுரேஷ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து பேசுகையில், நெல்லில் நன்மை தரும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் பற்றி தெளிவாக்க விளக்கினார்.

நெற்பயிருக்கு தேவையான உரங்களை பயிர்களின் நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் முறைகளையும் நெற்பயிரில் ஏற்படும் பூச்சிமற்றும் நோய் மேலாண்மை பற்றி எடுத்து கூறினார். வேளாண்மை துணை அலுவலர் பெருமாள் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இம்முகாமில் குருவித்துறை, தென்கரை மற்றும் மன்னாடி மங்கலம் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டார்கள். இப்பயிற்சிக்கானஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் விக்டோரியா செலஸ் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வேளாண் கண்டுணர் சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்பட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகள்

அரியலூர், நவ.8

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறையில் செயல்பட்டு வரும் அட்மா திட்டத்தின் சார்பில் உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ மாணவிகள் வேளாண் கண்டுணர் சுற்றுலா எனும் புதுமையான செயல்பாடு நடத்தப்பட்டது.



இத்திட்டத்தில் இதுவரை விவசாயிகள் மட்டுமே பயிற்சி மற்றும் கண்டுணர் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழக முதல்வரின் ஆணைப்படி இத்திட்டத்தில் முதன் முறையாக வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்து இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வேளாண் மையை இளைய தலைமுறையினரும் எளிதில் பின்பற்றும் நோக்கில் பள்ளி மாணவ மாணவிகள் பயன் பெறும் வகையில் வேளாண் கண்டுணர் சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தண்டலை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டிமடம் வட்டாரத்தில் உள்ள கருக்கை கிராமத்தில் அமைந்துள்ள வேளாண் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியர் ராஜகுமார் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் பேசுகையில் கண்டுணர் சுற்றுலாவின் நோக்கம், வேளாண்மையின் முக்கியத்துவம், வேளாண் துறை செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார். கடந்த 15 ஆண்டுகளாக பண்ணையை நிர்வகித்து வரும் விவசாயி பழனிசாமி, பண்ணை மேலாண்மை முறைகள் குறித்து விளக்கினார். பின்னர் பண்ணையில் அமைந்துள்ள பல்வகை நாற்றங்கால், நெல் சாகுபடித் திடல், பல்வகை பழ மரங்கள், மருத்துவ குணம் கொண்ட மரங்கள், கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்படும் மரங்கள், அதிக ஆக்சிஜனை உற்பத்தி செய்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முள்ளில்லா மூங்கில், நிழல் வலைக் குடில் அமைத்து நாற்றங்கால் அமைத்தல், குறைந்த நீரில் அதிக மகசூல் தரும் சொட்டு நீர் உரப் பாசன அமைப்பு, காபிச் செடி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகள், எலுமிச்சைப்புல் சாகுபடி, தீவனப் பயிர்கள் சாகுபடி, நாட்டுக் கோழி வளர்ப்புக் கொட்டகை ஆகியவற்றைப் பார்வையிட்டனர். விவசாயி பழனிச்சாமி மாணவ மாணவிகளுக்கு சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி கலந்துரையாடினார்.



பாரம்பரிய நெல் ரகங்களை சாகுபடி செய்து வரும் விவசாயி சுந்தரேசன், பாரம்பரிய நெல் இரகங்கள், அவற்றின் சிறப்பியல்புகள் மற்றும் மருத்துவ குணங்கள் குறித்து விளக்கினார். பின்னர் மாணவ மாணவிகள் எரவாங்குடி கிராமத்தில் அமைந்து உள்ள விவசாயி ஞானசேகரனின் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டையில் மீன் வளர்ப்பு, நாற்றங்கால் பராமரிப்பு முறைகள் பல்வகை மரங்கள் சாகுபடி செய்யும் முறைகளைப் பார்வையிட் டனர். பண்ணையில் ஏற்பாடு செய்திருந்த மரங்கள் நடும் நிகழ்வில் மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நட்டனர். கிரீடு வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் கலந்து கொண்டு அங்ககப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உரம் தயாரிப்பு முறைகள், காளான் வளர்ப்பு முறைகள், ஆகியவற்றை விளக்கி மாணவ மாணவிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி அனைவரையும் வரவேற்று அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் கண்டுணர் சுற்றுலாவின் நோக்கம் குறித்து விளக்கினார். சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், ஆரோக்கிய ராஜ் ஆகியோர் செய்திருந்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ் நன்றி கூறினார். இச்சுற்றுலாவில் தண்டலை அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ரேவதி, நதியா, சிவராமன், வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# மைக்ரோகிரீன் : உற்பத்தி செய்யலாம் வாங்க!

நவீன தொழில்நுட்பம் அனைத்து துறைகளிலும் நுழைந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. இதற்கு வேளாண் துறையும் விதிவிலக்கல்ல. சத்தான காய்கறிகளையும், தானியங்களையும் உண்ண வேண்டும் என்ற விழிப்புணர்வு விவசாயிகளிடமும், மக்களிடம் ஏற்பட்ட நிலையில், பாரம்பரிய விவசாயத்தில் இருந்து இயற்கை விவசாயத்துக்கு மாறினோம், மாறி வருகிறோம்.

அதுபோல, தானியங்களை வயல்களில் விளைவித்த காலம் மாறி, தற்போது நமக்கு தேவையான காய்கறிகள், கீரைகளை வீட்டுத் தோட்டம், மாடித் தோட்டம், பசுமைக்குடில் என பல்வேறு பெயர்களில் வீடுகளிலேயே வளர்த்து, நமது அன்றாட வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம். அதுவும் சத்து நிறைந்த உணவுகளை உண்டு வருகிறோம் என்ற மன நிறைவுடன். இப்படி வீடுகளில் உற்பத்தி செய்வதற்கென்றே உள்ளவை தான் மைக்ரோகிரீன் தாவரங்கள். இதை முளை கட்டிய தானியங்கள், காய்கறிகள், மூலிகைகள் எனச் சொல்லலாம்.



மைக்ரோகிரீன்ஸ் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் சாதனை படைத்து வருகிறார் கடலூர் மாவட்டம், பண்ருட்டியைச் சேர்ந்த எம்.பில் பட்டதாரியான ஏ.சாமுண்டீஸ்வரி. இப்பெண்மணி, சாமு மைக்ரோகிரீன்ஸ் என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். இதன் மூலம் ஏராளமான விளைபொருள்களை உற்பத்தி செய்தும், ஃபிரான்ஸைஸ் (அங்கீகார மையங்கள்) மூலம் உற்பத்தி செய்தும் அவற்றை விற்பனை செய்து வருகிறார்.

'அக்ரி டாக்டர்' மின்னிதழுக்காக சாமுண்டீஸ்வரியைத் தொடர்பு கொண்டோம். அவர் மைக்ரோகிரீன்கள் உற்பத்தி செய்யத் தொடங்கிய காரணத்தைக் கூறியது சுவாரசியமாக இருந்தது. இதோ பார்ப்போம்.




15 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு பெண் குழந்தை பிறந்தது. அதன் எடை ஒன்றே கால் கிலோ மட்டுமே இருந்தது. மருத்துவர்கள் சத்தான உணவை அளித்தால், எடை அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதனால் சத்து நிறைந்த கீரை சூப்களை கொடுங்கள் எனப் பரிந்துரைத்தனர். அதனால், சத்து நிறைந்த கீரைகள் எவை என்பது குறித்து பல்வேறு நூல்களைப் படிக்கத் தொடங்கினேன். கற்றறிந்தவற்றிலிருந்து குழந்தைக்கு தொடர்ந்து சத்தான கீரை சூப்களை அளித்தேன். விளைவு : ஒன்றே கால் கிலோவாக இருந்த என் குழந்தை ஒரே ஆண்டில் ஐந்தரை கிலோவாக எடை கூடியது. அதன் பிறகு கீரைகள் சார்ந்த உணவுப் பொருள்களை குழந்தைக்குக் கொடுக்கத் தொடங்கினேன்.

இந்நிலையில், மைக்ரோகிரீன்ஸ் குறித்து தெரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. முதலில் எனது வீட்டுத் தேவைக்காக மைக்ரோகிரீன்ஸ் ரகங்களைப் பயிரிடத் தொடங்கினேன். எனது குழந்தைக்கு 11 வயதாகும் வரை வீட்டுத் தேவைகளுக்கான மைக்ரோகிரீன்களையே உற்பத்தி செய்து வந்தேன். அதன் பிறகு, பணிக்குச் செல்லலாம் என முடிவு செய்தபோது, எனது பெண் தான் மைக்ரோகிரீன்ஸ் உற்பத்தியையே ஏன் ஒரு தொழிலாக நீங்கள் செய்யக் கூடாது என யோசனை கூறினார். அதன் பிறகு, கடந்த 4 ஆண்டுகளாக வர்த்தக ரீதியில் இதை உற்பத்தி செய்யத் தொடங்கினோம். இதற்காக சுமார் ஒன்றரை ஆண்டு காலம் முயற்சி மேற்கொண்டு, பல இடங்களுக்குச் சென்று தொழில் குறித்து தெரிந்து கொண்டோம் என்கிறார் சாமுண்டீஸ்வரி.

தற்போது உற்பத்தியை நானும் (அப்பெண்ணும்) வர்த்தகத்தை எனது தம்பி புஷ்பராஜனும் பார்த்துக் கொள்கிறோம். எனது கணவரும் பெண்ணும் உறுதுணையாக இருக்கின்றனர் எனக் கூறும் அப்பெண்மணி மேலும் தொடர்கிறார்...

மைக்ரோகிரீன்ஸைப் பொருத்தவரையில் சுமார் 200 வகைகள் உள்ளன. நாங்கள் சுமார் 50 வகைகளைப் பயிரிட்டு, விற்பனை செய்து வருகிறோம். நாங்கள் பயிரிடும் வகைகளில் சில. சூரியகாந்தி, பட்டாணி, முள்ளங்கி, ஓமம், கடுகு, பாசிப்பருப்பு, கொள்ளு, உளுந்து, கோதுமை உள்ளிட்டவை. இவற்றை நாங்கள் 400 சதுரடி பரப்பில் உற்பத்தி செய்து வருகிறோம். மேலும், தமிழகம் முழுவதும் எங்களுக்கென 25 ஃபிரான்சைஸ்கள் செயல்பட்டு வருகின்றன. எங்களது நிறுவனத்தில் 20 பேர் பணியாற்றி வருகின்றனர். தேவையானவர்கள், இத் தொழிலை மிகவும் ஆர்வத்துடன் செய்ய விருப்பம் உள்ளவர்களுக்கே ஃப்ரான்சைஸ் அளிக்கிறோம். 200 சதுரடி பரப்பு இருந்தால் போதும். இவர்களுக்கு விதை, மீடியம், சிப்பமிடும் பெட்டி, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றை நாங்களே அளிக்கிறோம். உற்பத்தி செய்யும் பொருள்களை நாங்களே சந்தைப்படுத்துகிறோம். இயற்கை அங்காடிகள் உள்ளிட்ட அங்காடிகளுக்கு உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களை அனுப்பி, மக்களுக்குக் கொண்டு போய் சேர்க்கிறோம்.

குறிப்பாக, இல்லத்தரசிகளை இலக்காக வைத்து ஃப்ரான்சைஸ் அளிக்கிறோம். 90 சதவிகிதம் பெண்களுக்கே அளிக்கப்படுகிறது.

ஆண்களைப் பொருத்தவரையில், மூத்த குடிமக்களுக்கு அளிக்கிறோம். ஒரு நாளைக்கு காலை 2 மணி நேரம், மாலை 2 மணி நேரம் வேலை செய்தால் போதும். ஒவ்வொருவரும் மாதம் ரூ. 20,000 முதல் ரூ.30,000 வரை வருமானம் ஈட்ட முடியும், ஈட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை வணிக மேம்பாட்டு மையத்தின் –சிம்ஹுாணூ முதன்மை செயல் அலுவலர் வசந்தன் செல்வம் அவர்களின் ஆலோசனை மற்றும் உதவியுடன் தமிழ்நாடு முழுவதும் மைக்ரோகிரீன்ஸ் குறித்த பயிற்சியை திறம்பட நடத்தி வருகிறோம். தமிழ்நாடு வேளாண் துறையினரும் எங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர். கண்காட்சிகளில் ஸ்டால் அமைக்க இலவச இடவசதி அளித்து வருகின்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இத்தொழிலைப் பொருத்த வரையில், ரூ.100 முதலீட்டிலும் தொடங்கலாம். ரூ.10 லட்சம் முதலீட்டிலும் தொடங்கலாம். இந்த விளைபொருள்களை உற்பத்தி செய்வது மிகவும் எளிது. இத் தொழிலைத் தொடங்க முன் வருவோருக்கு உரிய பயிற்சியை அளிக்கிறோம்.

விளைவிக்கும் பொருள்களை நாங்களே வாங்கிக் கொள்கிறோம். ஒவ்வொரு மைக்ரோகிரீன் உற்பத்தி செய்வதற்கும் ஒவ்வொரு முறை உண்டு. காலம் மாறுபடும். எதை உற்பத்தி செய்ய விரும்புகின்றனரோ, அவர்களுக்கு உரிய பயிற்சியை அளிக்கிறோம்.

ஆட்டிஸம்தெரபி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம்.

மைக்ரோகிரீன்கள் நீரிழிவு நோயைக் குணப்படுத்தவும், உடல் எடையை அதிகரிக்கவும், குறைக்கவும், புற்றுநோயைக் குணப்படுத்தவும் பெரிதும் உதவுகிறது. இதில் நார்ச்சத்துள்ள பொருள்கள் அதிகம் கிடைக்கின்றன. முடி வளர்வதற்கு உதவுகிறது. புரதச்சத்து அதிகம் உள்ளது.

மைக்ரோகிரீன்களின் பயன்பாட்டை சத்துணவு மையங்கள், பால்வாடி மையங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எங்களது இலக்கு. மேலும், வீட்டில் உள்ள பெண்கள் குழந்தைகளுக்கு இதை வளர்க்கும் முறையைக் கற்றுத் தர வேண்டும்.

அப்போதுதான் குழந்தைகள் நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிக்க முடியும். மேலும், வருமானமும் ஈட்டலாம் என்கிறார் சாமுண்டீஸ்வரி.

**தொடர்புக்கு : கைபேசி எண் - 63746 19870.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மண் இல்லா விவசாயம்
## (லாபம் கொட்டும் நவீன தொழில்நுட்பம்)



மண் இல்லா விவசாயமா? இது சாத்தியமாகுமா? என்று கேட்பவர்களுக்கு இது சாத்தியமான, நவீன தொழில் நுட்ப முறையில் விவசாயம் செய்யலாம் (HYROPONICS) என்ற ஹைட்ரோபோனிக்ஸ் என்ற நவீன சாகுபடி முறை இன்று விவசாய உலகில் ஒரு புரட்சியை எற்படுத்தி வருகிறது. மண்ணில்லா விவசாயம் என்பது மண்ணைப் பயன் படுத்தாமல் கனிம ஊட்டசத்துகள் கலந்த நீர் கரைசலை பயன்படுத்தி தாவரங்களை வளர்க்கும் ஒரு நவீன தொழில் நுட்பமாகும் (SOIL LESS FARMING).

**இதனுடைய சிறப்பு அம்சங்கள் என்ன என்ன தெரியுமா? என்பதை பார்ப்போம்.**

### 1) நீர் மேலாண்மை

பாரம்பரிய விவசாயத்தில் தண்ணீரின் தேவை மிக அதிகம். ஆனால் மண்ணில்லாத விவசாயத்தில் பயிர்களுக்கு தேவையான சத்துகள் அனைத்தும் நீரில் கரைத்து நேரடியாக வேர்களுக்கு வழங்கப்படுவதால் 90% வரை நீர் சேமிக்கப் படுகிறது. நிலத்தடி நீர் வற்றிப்போகும் கவலையில்லை. இது ஒரு சிறிய அறையிலோ மாடியிலோ பெரிய பசுமை குடில்களிலோ (GREEN HOUSE) அமைக்கலாம்.

### 2) குறைந்த நிலப்பரப்பு

குறைந்த பகுதிகளிலே அடுக்கு மாடி குடியிறுப்பு போன்ற இடங்களில் வைக்கலாம்.

**3) பூச்சி மருந்து**

மண் இல்லாததால் மண் சார்ந்த பூச்சிகள்/நோய் தொற்றுகள் ஏற்படுவது குறைகிறது. இதனாலே குறைவான இரசாயன பயன்பாடும் தவிர்க்கப்படுகிறது. மேலும் விளைப்பொருட்களை தரமும் ஆரோக்கியமாகவும் மேம்படுகிறது.

**4) ஆண்டு முழுவதும் மகசூல்**

மண்ணில்லா விவசாயம் ஆண்டு முழுவதுமாக செய்யலாம். இந்த நவீன தொழில்நுட்ப முறையால் எல்லா பருவத்திலும் மகசூல் பெறலாம். இங்கு ஓரே சீரான சிதோஷ்ண நிலை பின்பற்றப்படுவதால் சந்தையின் தேவைக்கேற்ப உற்பத்தியை கணிசமாக உயர்த்த லாம்.

**5) லாபத்திற்கான வழிகள்**

மண்ணில்லா விவசாயத்தில் முதலீடு ( ஞூஹிாசிறீவீ-னிசிஹிவீ) ஆரம்பத்தில் சற்று அதிகமாக தோன்றினாலும் நீண்ட காலத்தில் அது அதிக லாபத்தை தொடும்.

**6) அதிக மகசூல்**

வழக்கமான முறையை விட 3 முதல் 10 மடங்கு அதிக அளவாக மகசூல் கிடைப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

**7) தரமான உற்பத்தி**

கட்டுப்பாடான சூழல் இருப்பதால் ஓரே மாதிரியான தரமான காய்கறிகள் கீரைகள் மற்றும் பழங்கள் (வெள்ளரி, தக்காளி, கீரை வகைகள்) உற்பத்தி செய்யலாம். இவற்றுக்கான சந்தை வாய்ப்பு எப்போதும் இருக்கும் (COUSTOMER BASE) உள்ளன.

**8) தீவன உற்பத்தி (FODDER PRODUCTION)**

கால்நடைக்கு தேவையான தீவனங்களை உற்பத்தியை அதிகரிக்க இந்த மண்ணில்லா விவசாயம் பயன்படுத்தப் படுகிறது. (HIGH RETURNS WITH LOW EFFECTS).

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மக்காச்சோளப் பயிரில் மெக்னீசியம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் மேலாண்மை

சேலம், நவ.8

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகபிரியா, மக்காச் சோளப்பயிரில் மெக்னீசியம் ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் மேலாண்மை குறித்து தெரிவித்துள்ளதாவது, மக்காச்சோளம் குறைந்த நாட்களில் அதிக அளவு ஊட்டச்சத்துக்களை எடுத்துக் கொண்டு விளைச்சல் தரக்கூடிய ஒரு முக்கியப் பயிராகத் திகழ்கிறது.

இரண்டாம் நிலை ஊட்டச்சத்தான மெக்னீசியம் பயிரில் போதுமான அளவு பச்சையத்தை (Chlorophyll) உற்பத்தி செய்து, பயிருக்குத் தேவையான உணவைத் தயாரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதுமட்டுமின்றி, உற்பத்தி செய்யும் உணவைக் கிரகித்து ஆற்றலை, பயிரின் அனைத்துப் பகுதி களுக்கும் அனுப்பும் பணியையும் செய்கிறது.

**மெக்னீசியம் பற்றாக்குறை ஏற்படுவதற்கான காரணங்கள்**

**தொடர்ச்சியான சாகுபடி** : ஒரே பயிரைத் தொடர்ச்சியாகச் சாகுபடி செய்வது.

**ஊட்டச்சத்து சமநிலையின்மை** : அளவுக்கு அதிகமான பொட்டாசியம், கால்சியம் மற்றும் தழைச்சத்து இடுவது, மெக்னீசியம் பயிர்களுக்குக் கிடைப்பதைத் தடை செய்கிறது.

**மண் பண்புகள் :** அதிக அமிலத்தன்மை மற்றும் மணல் பாங் கான மண்ணில் மெக்னீசியம் குறைபாடு அதிகம் காணப்படும். ஏனெனில் சத்துக்கள் எளிதில் கசிந்து வெளியேறலாம்.

**ஈரப்பதம்** : தொடர்ச்சியான மழை அல்லது அதிகப்படியான மண் ஈரப்பதம் காரணமாக, சத்துக்கள் மண்ணுக்கு அடியில் சென்று விடுவதாலோ அல்லது பயிர்களால் சத்துக்களை எடுத்துக் கொள்ளமுடியாத நிலை ஏற்படுவதாலோ குறைபாடு உண்டாகலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**மெக்னீசியம் குறைபாட்டின் அறிகுறிகள்**

**ஆரம்பகால அறிகுறி :** பயிரின் அடி இலைகளில் வெளிர் பச்சை அல்லது மஞ்சள் நிறக்கோடுகள்/வரிகள் காணப்படும்.

**நரம்புகளின் நிலை :** ஆரம்ப நிலையில், இலையின் நரம்புகள் மட்டும் பச்சை நிறமாகவே காட்சியளிக்கும்.

**தீவிரமடைதல் :** பற்றாக்குறை தீவிரமடையும் போது, இலை நரம்புகளும் வெளிர் மஞ்சள் நிறமாக மாறி, இலைஓரங்கள் சிவப்பாக மாறும்.



**விளைவு :** இந்த அறிகுறி அடுத்தடுத்த இளம் இலைகளுக்குப் பரவுவதால், பயிரின் ஒளிச்சேர்க்கை திறன் குறைந்து, வளர்ச்சி குன்றி காணப்படும்.

**இழப்பு :** நாள்பட்ட மெக்னீசியம் ஊட்டச்சத்து பற்றாக்குறை, மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.

**தடுப்பு முறைகள் (சாகுபடி மேலாண்மை)**

**பயிர் சுழற்சி :** பயிர் சுழற்சி மிகவும் அவசியம். இல்லை யெனில், ஒரே விதமான ஊட்டச்சத்துக்கள் மண்ணிலிருந்து பயிர்களால் எடுத்துக்கொள்ளப்படுவதால் மண் வளம் குறையும்.

**மண் பரிசோதனை :** மண்ணைப் பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் போதுமான அளவு உரங்களை இடுவது அவசியம்.

**நீர் மேலாண்மை :** நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். நீர் தேக்கம் அல்லது தொடர்ச்சியான மண் ஈரப்பதம் பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும்.

**உரப் பயன்பாட்டைக் குறைத்தல் :** அளவுக்கு அதிகமான தழைச் சத்து, கால்சியம் மற்றும் பொட்டாசியம் இடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

**சத்துக்களை அளிக்கும் முறைகள்**

**மழைக்கால மேலாண்மை :** மழைக்காலங்களில், சத்துக்கள் கசிவதைத் தடுக்கத் தேவையான உரங்களை பிரித்து கொடுக்க வேண்டும். சொட்டுநீர் உரப்பாசனம் முறை மிகவும் சிறந்தது.

**இயற்கை வழி முறைகள் :** இயற்கை முறையில் சாகுபடி செய்பவர்கள் மெக்னீசியம் ஊட்டச்சத்தை மீன் அமிலம், எலும்பு உரம், கடல்பாசி உரம் மற்றும் முட்டை எலுமிச்சை கரைசல் போன்ற வற்றை இலை வழியாகப் பயன்படுத்தி அளிக்கலாம். டோலமைட் இடுவது, மண்ணின் அமிலத்தன்மையைச் சரி செய்து மெக்னீ சியத்தைக் கிடைக்கச் செய்யும்.

**இரசாயன வழிமுறைகள் (உடனடி தீர்வு)**

**மண்ணில் இடுதல் :** இரசாயன முறையில் சாகுபடி செய்பவர்கள் மெக்னீசியம் சல்பேட், பாலி சல்பேட் போன்ற உரங்களை இடலாம்.

**இலை வழித் தெளிப்பு :** உடனடி தீர்வுக்கு, நீரில் கரையும் வடிவில் உள்ள மெக்னீசியம் சல்பேட்டை (0.5% கரைசல் ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் 1 கிலோ) இலை வழியாக தெளிப்பதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என அயோத்தியாப்பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகபிரியா தெரிவித்துள்ளார்.

# சான்று விதைகளை பயன்படுத்துவோம்! அதிக மகசூல் பெறுவோம்!!

நாம் விதைக்கும் ஒவ்வொரு விதையும் நல்ல முளைப்புத் திறனும், வீரியமும் கொண்டிருத்தல் வேண்டும். வீரியமான விதைகளே விரைவில் முளைத்து, வாளிப்பான செடிகளை உருவாக்கி, அனைத்து இடர்களையும் தாங்கி வளர்ந்து, நல்ல முறையில் காய் பிடித்து அதிக விளைச்சல் தரவல்லது. ஒரு பொருளை வாங்கும் போது அதற்கு ஐ.எஸ்.ஐ என்ற தரச்சான்று முத்திரை உள்ளதா என்று பார்த்து வாங்குகிறோம். அது போலவே விதைத்தரத்திற்கும் உத்திரவாதம் தருவது விதைச் சான்று நிறுவனமாகும். விதை உற்பத்தி தரக்கட்டுப்பாட்டுக் கென்று சட்டப்பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட முறையே விதைச் சான்றிளிப்பாகும். மிக உன்னதமாக பயிர் இரகங்களின் விதைகளை மிகுந்த இனத்தூய்மையும், அதிக சுத்தத் தன்மையும், மிகுந்த முளைப்புத் திறனும் உள்ள விதைகளாக உழவர்களுக்கு வழங்கச் செய்வதே விதைச்சான்றளிப்பின் முக்கிய நோக்கமாகும்.



விதைச்சான்று பல்வேறு நிலைகளில் செய்யப்படுகின்றது. விதைப்புக்கு உபயோகிக்கும் விதைகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டுள்ளதா என்பது முதல் விதைப்பயிருக்கு உரிய தனிமைப்படுத்தும் தூரம், பயிர் வளர்ச்சிப் பருவம், பூக்கும் தருணம்,அறுவடை சமயம், விதைச்சுத்திகரிப்பு, மூட்டை பிடித்தல் முதலியவை சரியாக உள்ளனவா என்பது வரை ஆய்வு செய்யப்படுகிறது.

மேலும், விதைகளை முளைப்புச் சோதனைக்கு உட்படுத்தி சோதனை முடிவுகளைக் கொண்டு சான்று அட்டைகள் வழங்கப் படுகின்றன. இவ்விதமாக விதை உற்பத்தியின் பல்வேறு நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வின் போது வயல் தரம் மற்றும் விதைத்தரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட தரம் இருந்தால் மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கு சான்றளிக்கப்பட்டு, சான்று அட்டைகள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. ஆகவே விவசாயிகள் சான்று அட்டைகள் பொருத்தப்பட்ட சான்று செய்த விதைகளைப் பயன்படுத்தி அதிக மகசூலை பெறலாம்.

மேலும் விவசாயிகள் தங்கள் கைவசம் உள்ள விதைகளை விதைக்கும் போது அந்த விதைகள் சரியான முளைப்புத்திறன் உடையவை தானா என பரிசோதித்து விதைக்க வேண்டும். உளுந்து, பாசிப்பயறு, சோளம் போன்ற பயிர்களுக்கு 75 சதவீதமும், நிலக்கடலைக்கு 70 சதவீதம், நெல்லுக்கு 80 சதவீதமும் முளைப்புத்திறன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விதைகளை தூத்துக்குடி எட்டயபுரம் சாலை, ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில் செயல்படும் விதைப்பரிசோதனை நிலையத்தில் உரிய கட்டணத் துடன் பரிசோதித்து முடிவுகளை பெற்றுக் கொள்ளலாம் என திருநெல்வேலி விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக்நூஹ் ஆகியோர்கள் தெரிவிக்கிறார்கள்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# கறவை மாடுகளுக்கு சோடா உப்பை தீவனத்தில் சேர்ப்பதின் முக்கியத்துவம்

நம் நாட்டில் கறவை மாடுகள் வளர்ப்பானது விவசாயிகளுக்கு வருடம் முழுவதும் வருமானம் அளிக்கக் கூடிய சுய தொழிலாக அமைந்திருக்கிறது. கறவை மாடுகள் பராமரிப்பில் பால் உற்பத்தி மட்டுமல்லாமல், மாடுகளின் ஆரோக்கியம் மற்றும் நீண்ட கால உற்பத்தி திறனையும் பாதுகாப்பதில் தீவன மேலாண்மை மிகவும் அவசியம். அதிலும் குறிப்பாக கறவை மாடுகளின் தீவனத்தில் நாம் சமையலுக்கு பயன்படுத்தப்படும் சோடா உப்பை (சோடா பைக்கார் போனேட்) சேர்ப்பது, மாடுகளின் ஆரோக்கியத்தையும் பால் உற்பத்தி திறனையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சமையல் சோடாவானது மாடுகளின் ஜீரண மண்டலத்தில் அமிலத் தன்மையை சமநிலைப்படுத்தி செரிமானத்தை ஒழுங்குபடுத்து வதில் முக்கிய பங்காற்றுகிறது.

## கறவை மாடுகளின் தீவனத்தில் சோடா உப்பை சேர்ப்பதின் பலன்கள்

### 1. அதிக பால் உற்பத்தி மற்றும் பாலின் தரம்

ஒரு மாட்டிற்கு 15 முதல் 20 கிராம் அளவில் தினமும் சமையல் சோடாவை தீவனத்தில் கலந்து கொடுக்கும் பொழுது ஜீரண மண்டலத்தில் அமில-காரத் தன்மையை சமநிலைப்படுத்து வதால் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளின் செயல்திறனை மேம்படுத்தி பால் உற்பத்திக்குத் தேவையான சத்துக்களை முழுமையாகப் பயன்படுத்த உதவுவதால் பால் உற்பத்தியும் தரமும் அதிகமாகிறது.

### 2. அமிலத்தன்மை பிரச்சினைகளை தவிர்த்தல்

கறவை மாடுகளுக்கு அதிகப்படியான அரிசி சம்பந்தப்பட்ட மாவுச் சத்து அதிகமான தீவனத்தை கொடுக்கும் பொழுது மாடுகளின் வயிற்றில் அமிலத்தன்மை அதிகரித்து அசிடோசிஸ் எனப்படும் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படுத்தி கறவை மாடுகளின் ஆரோக்கியத்தையும் பால் உற்பத்தியையும் பாதிக்கும். ஆனால் கறவை மாடுகளின் தீவனத்தில் தினமும் சமையல் சோடாவை சேர்ப்பதால் அமிலத்தன்மை சம்பந்தப்பட்ட வயிற்றுப் பிரச்சினை யைத் தடுப்பதோடு, ஜீரணத்தை சீராக வைத்திருக்க உதவி செய்யும். மேலும் மாடுகளின் வயிற்றில் அமிலத்தன்மையால் ஏற்படும் பாதிப்புகள் வெகுவாகக் குறைக்கப்படுவதால் நன்மை தரும் நுண்ணுயிரிகள் பாதுகாக்கப்பட்டு நொதித்தல் தடையின்றி நடைபெறும். அதனால் பாலில் கொழுப்புச் சத்தும் அதிகரிக்கும்.

**3. வெயில் காலங்களில் ஏற்படும் வெப்ப அயற்சியைக் கட்டுப் படுத்துதல்**

வெயில் காலங்களில் கறவை மாடுகளில் வெப்ப அயற்சி காரண மாக அதிக மூச்சிறைப்பு, வாயில் அதிக எச்சில் வடிதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படு வதால் தீவனம் உண்பது குறைவதுடன் பால் உற்பத்தியும் குறையும். தினமும் கறவை மாடுகளுக்கு சமையல் சோடாவை தீவனத்தில் சேர்த்துக் கொடுப்பதால் வெப்ப அயற்சியால் ஏற்படும் பாதிப்பைக் குறைத்து கறவை மாடுகளின் ஆரோக்கியத்தையும் உற்பத்தி திறனையும் பாதுகாக்க உதவுகிறது.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**



# கத்தரி குருத்து மற்றும் காய்துளைப்பானை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்

தமிழ் நாட்டில் கத்தரி மிக முக்கியமான காய்கறிப்பயிராகும். கத்தரி தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. கத்தரி சாகுபடியில் பல்வேறு வகையான பூச்சிகள், நோய்கள், நூற்புழுக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை போன்ற பல காரணிகளால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. அவற்றுள் கத்தரியைத் தாக்கும் குருத்து மற்றும் காய்துளைப்பான் மிக முக்கியமான, அதிக மகசூல் இழப்பை ஏற்படுத்தக்கூடிய பூச்சி. இவற்றை கட்டுப்படுத்த விவசாயிகள் மிக அதிக அளவில் பூச்சிக்கொல்லிகளை அதாவது 10 முதல் 15 முறை இரசாயண பூச்சிக்கொல்லிகளை உபயோகிக்கின்றனர். அதிகமான அளவு பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதால் காய்கறிகளில் எஞ்சிய நஞ்சு அதிகமான அளவு இருப்பதாகவும், விவசாய சுற்றுச்சூழலில் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டதாகவும், இதனால் மனிதர்களுக்கு பல்வேறு விதமான நோய்கள் மற்றும் சுற்றுசூழல் மாசு ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் மூலம் இந்த பூச்சிகளை கட்டுப்படுத்தி எஞ்சிய நஞ்சு இல்லாத காய்கறிகளை உற்பத்தி செய்யலாம்.

**சேதத்தின் அறிகுறி**

இளம் குருத்து வாடி காணப்படும். நடுக்குருத்து காய்ந்து இருக்கும். குருத்து மற்றும் காய்களை துளைத்து அதனுள் உள்ள திசுக்களை உண்டு கழிவை துளைக்கு வெளியே தள்ளும். மொக்கு மற்றும் சிறு காய்கள் உதிர்ந்து விடும். இலைகள் வாடி காய்ந்து விடும்.





**பூச்சியின் விபரம்**

| | |
|---|---|
| முட்டை | : வெண்ணிற முட்டை |
| புழு | : சிவப்பு கலந்த ஊதா நிறத்துடனும் பழுப்பு நிற தலையுடன் இருக்கும். |
| கூட்டுப்புழு | : சாம்பல் நிற, படகு வடிவ பட்டுக்கூடு |
| அந்திப் பூச்சி | : நடுத்தரமான அந்துப்பூச்சி. முன் இறக்கைகள் முக்கோண வடிவ பழுப்பும் மற்றும் சிவப்பு நிற அடையாளங்கள் காணப்படும். பின் இறக்கைகள் வெண்ணிறத்தில் கரும் புள்ளிகள் காணப்படும். |

**கட்டுப்படுத்தும் முறைகள்**

● தொடர்ச்சியாக கத்திரி பயிரிடுவதை தவிர்க்கவும்.

● சாகுபடிக்கு முன் கோடை உழவு செய்ய வேண்டும். இதன் மூலம் மண்ணிலுள்ள பூச்சிகளின் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களை வெளிக் கொணர்ந்து அழிக்கப்பட வேண்டும்.

● நீளம் மற்றும் குறுகலான காய் உள்ள ரகங்களை தேர்வு செய்து பயிரிடவும்.

● மண் பரிசோதனை செய்து பரிந்துரையின் படி உரம் இட வேண்டும்.

● ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கை கடைசி உழவின் போது இட வேண்டும்.

● நெருக்கமாக நடுவதை தவிர்த்து போதிய இடைவெளி விட்டு நட வேண்டும். (90 x 60 செ. மீ)

● வரப்பு பயிராக தட்டைப் பயிர் மற்றும் உளுந்து சாகுபடி செய்ய பட்டு நன்மை செய்யும் பூச்சிகளான பொறி வண்டுகள், கண்ணாடி பூச்சி மற்றும் சிற்பிட் ஈக்கள் அதிகமாக இன பெருக்கம் அடைந்து தீமை செய்யும் பூச்சிகளை பிடித்து உண்டு சேதம் வெகுவாக குறைக்கப்படும்.

● மக்காச் சோளத்தை தடுப்புப்பயிராக வயலைச் சுற்றி சாகுபடி செய்யவேண்டும்.

● திணை மற்றும் சோளத்தை ஊடுபயிராக சாகுபடி செய்தால் புழுக்களை தின்னும் பறவைகளின் நடமாட்டம் அதிகரிக்கும்.

- பூச்சிகளின் முட்டைக் குவியல்கள், சிறிய மற்றும் வளர்ந்த புழுக்கள், பூச்சிகள் தாக்கப்பட்ட உதிர்ந்த பிஞ்சுகள், பூக்கள், காய்கள் மற்றும் இலைகள் ஆகியவற்றை அழிக்க வேண்டும். இதனால் பூச்சிகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும்.

- பாதிக்கப்பட்ட அல்லது சேதமடைந்த இளங்குருத்து அல்லது நுனித்தண்டுகளை சேகரித்து அழிக்கவும்.

- காய்ப்புழுக்களின் நடமாட்டத்தை ஏக்கருக்கு ஐந்து இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்து கண்காணிக்க வேண்டும்.

- புழுக்களை கொத்தித் தின்னும் பறவைகளின் வருகையை ஊக்கப்படுத்த மரக்கிளைகளை வயலில் ஏக்கருக்கு 20 இடங்களில் வைக்க வேண்டும்.

- பூச்சிகள் முட்டையிடுவதை தவிர்க்கவும், இளம் புழுக்களின் தாக்குதலை தவிர்க்கவும் அசாடிராக்டின் 1.0% EC (10000 ppm) 500 மிலி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

- காய்ப்புழுக்களின் முட்டைகளை அழிக்க ட்ரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணிகளை பூக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 60,000 என்ற எண்ணிக்கையில் 15 நாள்கள் இடைவெளியில் 3 முறை விடவேண்டும்.

- செயற்கை பயிரித்திரைடு உபயோகிப்பதை தவிர்க்கவும்.

- காய்முதிர்ச்சி மற்றும் அறுவடை நேரங்களில் பூச்சிக் கொல்லி உபயோகிப்பதை தவிர்க்கவும்.

- பூச்சி தாக்குதலின் ஆரம்ப நிலையில்

- வேப்ப விதை வடிநீர் 5% ஏக்கருக்கு 10 கிலோ பொடி செய்த வெப்ப விதையை 50 லிட்டர் தண்நீரில் இரவு முழுவதும் ஊற வைத்து அடுத்த நாள் வடிகட்ட வேண்டும். வடிகட்டிய வேப்ப விதை நீரை, தேவையான அளவு தண்ணீர் கலந்து, 200 லிட்டர் என்ற ளவில் உருவாக்கம் செய்து அதனுடன் லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.



● அல்லது வேப்ப எண்ணை 3 சதம் (லிட்டருக்கு 30 மிலி) அதனுடன் லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

● அல்லது அசாடிராக்டின் 1.0% EC (10000 ppm)3 மி. லி /லி தெளிக்க வேண்டும்.

● பேசில்லாஸ் துரின்ஜிஎன்ஸ்என்ற பாக்டீரியா வை லிட்டருக்கு 2 என்ற அளவில் லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

● காய்ப்புழுக்களின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டி இருப்பின் கீழ் கண்ட ஏதாவது ஒரு மருந்தை தெளிக்க வேண்டும்.

அசாடிராக்டின் 1.0% EC (10000 ppm)3 மி. லி /லி

டைமெத்தோயேட் 30% EC 7 மி. லி / 10 லி

எமாமெக்டின் பென்சோயேட் 5% SG 4கி / 10 லி

தயோடிகார்ப் 75% WP 2கி / லி

ப்புளுபெண்டியமைடு (480 எஸ். சி) 5 % SG 7.5கி / 10 லி

குவினால்பாஸ் 25% EC 15 மி. லி / 10 லி

● சாகுபடி முடிந்தவுடன் எஞ்சியுள்ள காய்களைப் பறித்துவிட்டு செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்தப்பட்டால் பூச்சிகளின் தொடர் தாக்குதல் கட்டுப்படுத்தப்படும்.

தகவல் : த.சுகன்யா தேவி, இளநிலை ஆய்வாளர், மு.அழகர், க.செங்குட்டுவன், ஷீலா வேணுகோபால், வ.பாஸ்கரன், உதவிப் பேராசிரியர்கள், பா.ச.சண்முகம், பெ.அ.சரவணன், து.ஸ்ரீ நிவாசன், ச.வெள்ளைக்குமார், இணைப் பேராசிரியர்கள் மற்றும் ச.அபிஷேக் பிரவீன், ஆ.சஹானா பார்கவி, பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.



Rithvik Pipe

IS 4985 : 2021
IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**